**<u>In the Court of the District Munsif, Eraniel</u>**

**Original Suit No. 47/2021** **Date:12.03.2026.**

**(DW1)- நிக்கோலஸ்**

<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>

1. நான் என்ன படித்துள்ளேன் என்றால் M.A. படித்துள்ளேன். நான் என்ன வேலை செய்கிறேன் என்றால் பாண்டிசேரி ஜிப்மர் மருத்துவமனையில் வேலை பார்த்து வந்தேன். என்னுடன் பிறந்தது எத்தனை நபர்கள் என்றால் இரண்டு நபர்கள் ஆகும். ஜோசப்பாத்ராஜ் வாதியின் தகப்பனார் என்றால் சரிதான், அவர் வழக்கறிஞர் ஆவார். நானும் எனது சகோதரர் ஜோசப் பாத்ராஜ் - ம் நல்ல உறவில் இருந்தோம் என்றால் பேசி கொண்டுதான் இருந்தோம். இந்த வழக்கின் வாதி வெளிநாட்டில் வேலை செய்து வருகிறார் என்றால் சரிதான்.

2. ஜோசப் பாத்ராஜ்- ம் நானும் எங்களுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை சேர்ந்து பார்த்து வந்தோம் என்றால் சரியல்ல, என்னுடைய அதிகபடியான சொத்துக்களை எனது சகோதரர்தான் பார்த்து வந்தார். எனது நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான் என்றால் சரிதான். நிரூபண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகளை நான் படித்து பார்த்து தான் கையெழுத்து போட்டேன் என்றால் சரிதான். நான் பொதுவாக எந்தவொரு ஆவணத்திலும் படித்து பார்த்து தான் கையெழுத்து போடுவேன் என்றால் எனது தம்பி வழக்கறிஞராக இருந்ததால் அவர் காட்டும் இடத்தில் படிக்காமல் கையெழுத்து போட்டுள்ளேன்.

3. ஓங்குரிமை மற்றும் ஒடுங்குரிமை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனது தம்பி ஜோசப் பாத்ராஜ் எனக்கு 17.140 செண்ட் நிலம் எழுதிக்கொடுத்துள்ளாரா என்றால் எழுதி தருவதாக கூறியிருந்தார். 21.07.2017 ல் ஜோசப் பாத்ராஜ் எனக்கு சர்வே எண் 62/7பி ல் 17.140 செண்ட் நிலம் எழுதிக்கொடுத்தார் என்றால்

கையெழுத்து போட சென்னார் போட்டேன். மேற்படி நிலம் என் கைவசத்தில் தான் உள்ளதா என்றால் என் கைவசத்தில் தான் உள்ளது. மேற்படி சொத்திற்கான ஆவணம் என் கைவசம் உள்ளதா என்றால் தெரியவில்லை.

4. என்னிடம் காட்டப்படும் ஆவணம் மேற்படி ஆவணம் என்றால் அது பற்றி தெரியாது. வாதிக்கு தாவா சொத்து எவ்வாறு கிடைத்தது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள கையெழுத்து என்னுடைய கையெழுத்து என்றால் சரிதான் ஆனால் எதற்கு போட்டேன் என்று தெரியாது எனது தம்பி கையெழுத்து போட சென்னான் போட்டேன். வா.சா.ஆ.1 ஆவணத்தில் சொத்து விபரத்தில் கிழக்கு எல்கையாக குடும்ப பொது பாதை குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

5. வா.சா.ஆ.1 ஆவணத்தில் இணைக்கப்பட்டுள்ள வரைபடத்தில் மேற்படி பாதை காட்டப்பட்டுள்ளது என்றால் அது பற்றி தெரியாது. M.A படித்து பெரிய நிறுவனத்தில் வேலை பார்த்த நான் ஆவணத்தில் என்ன எழுதி உள்ளது என்பதை படித்து பார்க்காமல் கையெழுத்து போட்டுள்ளேன் என்று வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் எனது தம்பி மீது உள்ள நம்பிக்கையில் படிக்காமல் கையெழுத்து போட்டேன். 2016 வருடமே நான் சி பட்டிகை பாதையை ஒப்புக்கொண்டு வா.சா.ஆ.1 ஆவணத்தில் கையெழுத்து போட்டுள்ளேன் என்றால் சரியல்ல.

6. வாதி பிராதுடன் தாக்கல் செய்துள்ள மாதிரி வரைபடத்தை நான் பார்த்துள்ளேனா என்றால் பார்க்கவில்லை. என்னிடம் காட்டப்படும் நீதிமன்ற ஆணையர் வரைபடம் வாதி தாக்கல் செய்துள்ள மாதிரி வரைபடத்துடன் ஒத்துபோகிறது என்றால் நான் அதை பார்க்கவில்லை. நீதிமன்ற ஆணையரின் அறிக்கைக்கு நான் ஆட்சேபனை எதுவும் தெரிவித்தேனா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வாதியின் ஏ பட்டிகை சொத்திற்கு நான் மாற்று பாதை இருப்பதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான்.

7. மேற்படி பாதையை நீதிமன்ற ஆணையரிடம் நான் காட்டினேனா என்றால் நினைவில்லை. நீதிமன்ற ஆணையர் தனது வரைபடத்தில் எந்த மாற்று பாதையும் குறிப்பிடவில்லை என்றால் அது பற்றி தெரியாது. நான் எனது எதிருரையில் வாதி தனது பிராதில் பாதையின் அளவுகளை குறிப்பிடவில்லை என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான், ஸ்தளத்தில் பாதை என்பதே இல்லை. எனது எதிருரையில் உள்ள சங்கதிகளை படித்து பார்க்காமல் கையெழுத்து போட்டுள்ளேன் என்றால் வழக்கறிஞர் படித்து காட்ட நான் கையெழுத்து போட்டேன்.

8. எனது பெற்றோர் அவர்களுக்கு சொந்தமான சொத்துக்களை வைத்து என்னையும் எனது உடன் பிறந்தவர்களையும் படிக்க வைத்தார் என்றால் சரிதான். ஓகி புயலின் போது எனது சொத்தின் ஏதேனும் மரம் முறிந்து விழுந்ததா என்றால் ஒரு தென்னை மரம் விழுந்தது. அதே போல் எனது சகோதரர் சொத்திலும் தென்னை மரம் முறிந்து விழுந்தது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனது சொத்தின் வடக்கு பக்கம் உள்ள காம்பவுண்ட் சுவர் ஜோசப் பாத்ராஜ் கட்டியது என்றால் சரியல்ல, நான் தான் கட்டினேன். மேற்படி சுவர் எப்போது கட்டப்பட்டது என்றால் சுமார் 30 வருடங்களுக்கு முன்பு கட்டியிருக்கலாம்.

9. மேற்படி சுவர் என்ன கற்களால் கட்டப்பட்டது என்றால் கருங்கற்களால் கட்டப்பட்டது. வா.த.சா. 2 மேற்படி சுவர் 7 வருடங்களுக்கு முன்னர் கட்டப்பட்டதாக குறிப்பிட்டுள்ள விபரம் எனக்கு தெரியுமா என்றால் நான் கட்டிய சுவரை பற்றி அவருக்கு தெரியாது. நானும் வாதியும் ஒரே குடும்பத்தை சேர்ந்தவர்கள் என்றாலும் எங்கள் இருவருக்கும் பொதுவான சொத்தில் இருந்து தான் சொத்துக்கள் பிரித்து கொடுக்கப்பட்டது என்றாலும் எனவே வாதி கோரியுள்ள வசதி உரிமை பரிகாரம் வாதிக்கு கிடைக்கதக்கது என்றாலும் சரியல்ல.

10. வாதியும் வாதியின் தந்தையும் தாவா சொத்தை பாதையாக அனுபவித்து

வந்தார்கள் என்றால் சரியல்ல. வாதியின் தந்தை இறந்த பின்பு அவரது சொத்தை அபகரிக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் பாதையை அடைத்து பொய் கட்சி செய்கிறேன் என்றால் சரியல்ல. வாதியின் தந்தையிடம் 17.140 செண்ட் நிலத்தை மறுபயன் எதுவும் கொடுக்காமல் இஷ்டதானமாக எழுதி வாங்கியது போல் தாவா சொத்தையும் பெறலாம் என்று நினைத்து முடியாததால் எல்கை சுவர் அமைத்து தற்போது மேற்படி சொத்தை அபகரிக்க நினைக்கிறேன் என்றால் சரியல்ல.

11. வாதி கோரியுள்ள பரிகாரம் வாதிக்கு கிடைக்கதக்கது என்றால் சரியல்ல. நான் இவ்வழக்கில் பொய்யான சங்கதிகளை கூறி பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**(ஒப்பம்)**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி**,
இரணியல்.